ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# திருத்தொண்டர் சதகம் வெளிப்படுத்தும் அடியார்களின் குரு வழிபாடும் வீடுபேறும்

மு.வடிவேல்
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்),
தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக்கழக
முதுகலை பட்ட மேற்படிப்பு விரிவாக்க மற்றும்
ஆராய்ச்சி மையம், பெருந்துறை, ஈரோடு – 638052

முனைவர் இரா.மல்லிகா,
நெறியாளர், உதவிப்பேராசிரியர் &
துறைத்தலைவர் (பொ), தமிழ்த்துறை,
பாரதியார் பல்கலைக்கழக முதுகலை பட்ட
மேற்படிப்பு விரிவாக்க மற்றும் ஆராய்ச்சி
மையம், பெருந்துறை, ஈரோடு – 638052

ஆய்வுச்சுருக்கம்

மனித வாழ்வினை ஒழுங்குப்படுத்துவதில் குருவின் பங்கு ஏராளம். அது அவரின் தலையாய கடமையாகும். அவ்வகையில் திருத்தொண்டர் சதகத்தில் அடியார்கள் இறைவனை குருவாக அமைத்து வழிபட்டு வீடுபேறு அடைந்துள்ளனர். நாயன்மார்களுள் பதினொரு நாயன்மார்கள் பிற அடியார்களுக்கு குருவாக அமைந்துள்ளனர். முதலில் திருஞான சம்பந்தர் ஞானப்பாலை பருகி, ஆண்பனையை பெண் பனையாக மாற்றுதல், பூம்பாவை உயிர்பெறச் செய்தல் போன்ற பல அற்புதங்களை நிகழ்த்தி இறைவனை வழிபட்டு வீடுபேறு பெற்றார். திருநாவுக்கரசர் சமண சமயத்திலிருந்து சைவத்திற்கு மாறியதால், சமணர்களால் வழங்கப்பட்ட இன்னல்களைக் கடந்து இறைவனை வழிபட்டு வீடுபேறடைந்தார். திருமூலர், திருமந்திரம் என்ற பாக்களால் தமிழுக்கு சிறப்பு சேர்த்து நற்கதியடைந்தார். அப்பூதி நாயனார், திருநாவுக்கரசரை தன்னுடைய குருவாக ஏற்று இறைவனை வழிபட்டு நற்பேறு பெற்றார். பெருமிழலைக் குறும்ப நாயனார், சோமாசி மாற நாயனார், நின்றசீர் நெடுமாற நாயனார், மங்கையர்க்கரசியார், குலச்சிறை நாயனார், கணநாத நாயனார், நீலகண்டப்பாண நாயனார் போன்றோர் இறைவனையும், சமயக்குரவர்களையும் குருவாக அமைத்து வழிபட்டு வீடுபேறு பெற்றனர்.

கலைச்சொற்கள்

இறைவன், குரு, பக்திநெறி, வழிபாடு, அடியார்கள், வீடுபேறு

## முன்னுரை

சமய சாத்திரங்களைப் போதிப்பவரும், சமயாசாரக் கிரியைகளைச் செய்பவரும், ஆன்மிகம் மற்றும் பிறத் துறையில் சந்தேகங்களைப் போக்கி நல்வழிப்படுத்தும் வழிகாட்டியாக விளங்குபவர் குரு ஆவார். குருவை மனிதரெனக் கருதாது, இறைவன் என கருதுதல் வேண்டும். குரு என்றால் அஞ்ஞானத்தைப் போக்குபவர் அல்லது பாசத்தை நீக்குபவர் என்பது பொருள்.

இறைவன் எமது பிறவித் துன்பத்தை நீக்கவே, குருவாக எழுந்தருளுகின்றார். இதனைத் திருவருட்பயன் பாடல் தெளிவாக விளக்குகின்றது.

பார்வையென மாக்களை முன்பற்றிப் பிடித்தற்காம்
போர்வையெனக் காணார் புவி (திருவருட்பயன் பா.45)

பழக்கப்பட்ட மிருகத்தின் உதவியுடன் அதே இனத்து மிருகத்தைப் பிடிப்பர். அதேப் போல இறைவன் எம்மை ஆட்கொள்ள மானிடத் திருமேனி தாங்கி வருகின்றார். குருவாய் வந்து இவை நன்னெறி இவை தீயநெறி என்று உணர்த்துவார். இறைவன் எனக் கருதி மனம், வாக்கு, காயம் எனும் மூன்றினாலும் குருவை வழிபடல் வேண்டும். குருவை உள்ளன்போடு வழிபடுவதுடன் சமயகுரவர், சந்தானகுரவர் முதலியோரது குருபூசை நாட்களை வழிபடலாம்.

*திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்*

*சீகாழியில் சிவபாத இருதயருக்கும் பகவதியாருக்கும் மகனாக பிறந்து உமாதேவியாரிடம் ஞானப்பாலைப் பருகி, இசைத்தமிழ் பாடினார். 'தோடுடைய செவியன்' இயலோடு இசையும் சேர்த்துப் பாடி இறைவனை வழிபட்டதாக,*

*"செல்வர் கவுணியர்நீல வல்லி அமுது உண்டு... " (திருத்தொண்டர் சதகம் பா.39)*

*என இப்பாடல் வரி செப்புகிறது. மேலும்,*

*"வம்பறா வரிவண்டு மணநாற மலரும்*

*மது மலர்ந்த கொன்றையான் அடியலாற் பேணா*

*எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்" (திருத்தொண்டர் புராணம் பா.5)*

*திருக்கோலக்காவில் பொன்தாளமும், திருநெல்வாயில் முத்துச்சிவிகையும், திருச்சத்திமுற்றத்தில் முத்துப்பந்தரும், திருவாவடுதுறையில் பொற்கிழியும் பெற்றார். திருமருகலில் பாம்பு கடித்த விடத்தைப் போக்கி, பாண்டியனின் வெப்பு நோயை நீக்கி திருஒத்தூரில் ஆண்பனையை பெண்பனையாக்கி, மயிலாம்பூரில் பூம்பாவையை உயிர் பெற செய்து, நல்லூர் பெருமணத்தில் நம்பாண்டார் மகளாகிய சொக்கி என்பவளை மணம் செய்து திருமணம் நிகழ்ந்த அந்த நாளிலே இறைவன் சோதி வடிவில் வந்து ஆட்கொள்ளப்பட்டதாக,*

*"நம் பாண்டார் தரும்*

*மருமலர்க் குழலிதன் திருமணம் செய்திடமுன்" (திருத்தொண்டர் சதகம் பா.39)*

*இப்பாடல் வரிகளின் வழியே அறிந்துகொள்ளமுடிகிறது.*

*திருநாவுகரைய நாயனார்*

*சமண சமயத்தை விட்டு சைவ சமயத்திற்கு மாறிய நாவுக்கரசருக்குப் பல இன்னல்கள் வந்தன.*

*"வெருவுநீற் றறைநஞ்சு வேழம்உய்ந்து அலைநீந்தி.." (திருத்தொண்டர் சதகம்.பா.32)*

*என்ற வரியின் வாயிலாக புலனாகிறது. திருவாமூரில் வேளாளர் மரபில் புகழனார் மாதினியார்க்கு மகனாக பிறந்தவர். இளமையில் பெற்றோரை இழந்து தமக்கை திலகவதியாரால் வளர்க்கப்பட்டவர். இளமையிலே சமண சமயத்தை தழுவி வாழ, தமக்கையின் வேண்டுதலுக்கு இணங்கிய சிவபெருமான் நாவுக்கரசருக்குச் சூலை நோய் தந்து தமிழ்ப்பா துதிக்க செய்து, நோய் தீர்த்து அருள்புரிந்தார். திருநாவுக்கரசர், சிவபெருமானை தன் வாழ்வின் குருவாக கொண்டுள்ளாரென்பதனை,*

*"திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட*

*திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்"(திருத்தொண்டர் புராணம் பா.4)*

*இப்பாடலின் வாயிலாக அறியலாகிறது.*

*இன்னல்களில் இருந்து சிவபெருமானின் அருளால் தப்பி, சிவனின் சூலமுத்திரையும், இடப முத்திரையும் பொறிக்கப் பெற்று திருமறைக்காட்டில் மறைக்கதவு திறந்து, திருவீழிமிழலையில் பொற்காசு பெற்று, பாம்பு தீண்டிய அப்பூதியார் மகனை உயிர் பெற செய்து சிவபெருமானின் திருவடிகளைத் தம் முடிமேல் விரும்பிப் பெற்று வழிபாடு செய்து, இறுதியாக பூம்புகாரில் சிவனால் ஆட்கொள்ளப்பட்டார்.*

*"மருவுதாள் முடிகொளப் பூம்புகலூர் தனில் முன்... " (திருத்தொண்டர் சதகம் பா.32)*

*என அறிந்து கொள்ளமுடிகிறது.*

*திருமூல நாயனார்*

*சாத்தனூரில் ஆயர் குலத்தைச் சார்ந்த மூலன் என்பவன் பசுக்களை மேய்த்துக் கொண்டிருக்கும் போது உயிர் நீங்க, அந்த நேரம் பசுக்கள் கதறுவதனை அறிந்து அவ்வழியே கயிலையிலிருந்து வந்த சித்தர் மூலனுடைய உடலில் புகுந்து (கூடுவிட்டு கூடு பாய்தல்) பசுக்களை வீடு கொண்டுச்சேர்த்தார்.*

*"ஆவின்குழாம் கதறு மாறு கண்டுஅவ் வுடல் தன்*

*ஆசிகொண்டு எழவும்... " (திருத்தொண்டர் சதகம்.பா.41)*

*மூலன் உடலிலிருந்த சித்தர் மூலனுடைய வீடுபுகாமல் வீட்டினைத்துறந்து ஞானம் தரும் சொற்களைப் பேசி ஆவடுதுறையை நோக்கிச் சென்று அங்கு அரசமரத்தடியில் தங்கி ஆண்டுக்கு*

*ஒரு பாடலாக பாடி மூவாயிரம் பாடல்கள் கொண்ட திருமந்திரம் என்ற நூலினைத் தமிழுக்கு அருள, இறைவனால் ஆட்கொள்ளப்பட்டதாக,*

*"புகன்றும்ஆ வடுதுறைக் குளழுந்து அரசுஅடி*
*பொருந்தி ஆண்டு ஒருபாத் திரு*
*மந்திரம் தானும் மூவாயிரம் கூற... " (திருத்தொண்டர் சதகம் பா.41)*

*என இப்பாடல் சான்றாக விளங்குவதை அறியமுடிகிறது.*

*அப்பூதி நாயனார்*

*திங்களூரில் அந்தணர் மரபில் தோன்றியவர். சிவனின் அடியாரான நாவுக்கரசரை குருவாக ஏற்றுக்கொண்டு தம் வீட்டிலுள்ள அனைத்துப் பொருட்களுக்கும் நாவுக்கரசர் என பெயரிட்டு வழங்கி வந்தார். அப்பூதியார் அமைத்திருந்த தண்ணீர் பந்தலுக்கு நாவுக்கரசர் பெயரிட்டிருந்தார். அவ்வழியே வந்த நாவுக்கரசர் அதனை கண்டு வினவி, அப்பூதியார் வீட்டிற்குச் சென்றார். அவரை யார் என்று வினவி அறிந்து அவருக்கு அமுது படைக்க ஏற்பாடு செய்தார்.*

*மூத்த மகனை வாழைக் குருத்துக் கொண்டு வருமாறு கூற, சென்ற இடத்தில் பாம்பு தீண்டி இறந்து விடுகிறான். அதனையறிந்து நாவுக்கரசர் இறையருளால் விடத்தைப் போக்க, பின் உணவை உட்கொள்ள இறைவன் அருள்புரிந்தார்.*

*"புதல்வனைக் கதலிஇலை கொடுவா எனச் சொல்ல*
*பொங்குஅரவு தீண்டி வீய*
*மங்கதா சேயின்விடம் மாற அமுது இடவும்முன்... " (திருத்தொண்டர் சதகம் பா.36)*

*என இவ்வரிகள் இயம்புகின்றன.*

*பெருமிழலைக்குறும்பர் நாயனார்*

*பெருமிழலையில் தோன்றியவர். விரும்பும் திருப்பணிகளைச் செய்து அடியவர்களுக்கு நாள்தோறும் உணவளித்து வேண்டிய செல்வம் வழங்கும் இயல்புடையவர்.*

*"விரும்புதிருப் பணிநிரம்ப, அமுது ஊட்டிநிதி*
*வேண்டுவது அளிப்பர்.... " (திருத்தொண்டர் சதகம் பா.34)*

*சுந்தரரை மனத்தால் சிந்தித்து வாயால் வாழ்த்தி கைகளால் தொழுது எம்பெருமான் திருவருள் பெறுவதற்குத் திருவைந்தெழுத்தை ஓதியவராய் அட்டமா சித்திகளையும் பெற்றவர். தன் ஞான அறிவினால் சுந்தரர் கயிலையை அடைய போகும் நாளினைத் தெளிவாக உணர்ந்து, அவர் திருவடி வணங்கி அவரை வரவேற்க முதல் நாளே கயிலையை அடையுமாறு இறைவன் அவரை ஆட்கொண்டதாக,*

*"நாடும்கபா லம்நடு மீதில்மூ லம்குவிய*
*நாட்டின்வன் தொண்டர் வெள்ளி*
*மாதிரம் பெறுவது அறி வால்தெரிந்து அடிதொழமுன்... " (திருத்தொண்டர் சதகம் பா.34)*

*இப்பாடல் வரி வெளிப்படுத்துகிறது.*

*சோமாசி மாற நாயனார்*

*அம்பர் என்ற திருத்தலத்தில் வேதியர் குலத்தில் தோன்றியவர். சிவனடியார்களுக்கு அறுசுவை உணவு அளிப்பவர். பல வேள்விகள் செய்து திருவைந்தெழுத்தை ஓதி வழிபட்டவர். திருவாரூரின் சுந்தரரை பணிந்து போற்றும் செயலால் ஆறு பகைகள் நீங்கி தீய நெறியிலிருந்து விலகி ஐம்பொறிகளுக்கு ஐம்புலன்களையும் வென்று திருமாலும் அடைய முடியாத சிவலோகத்தை அடையுமாறு சிவனால் அருள் செய்து ஆட்கொள்ளப்பட்டார்.*

*"புதுமையால் ஓர்ஆறு குற்றமும் தீநெறிசெல்*
*புலன்ஐந்தும் வென்று புனித*
*மாதவனும் ஓதஅரிய சிவலோகம் மேவிடமுன்... " (திருத்தொண்டர் சதகம் பா.44)*

*என்பதை இவ்வடிகள் வெளிப்படுத்துகின்றன.*

*நின்றசீர் நெடுமாற நாயனார்*

*தடுமாறும் வழிகளையே தவநெறி என்று கைக்கொண்டு அருமையான தம் உடல்களை வீணாக கெடுத்துக் கொள்ளும் சமணர்களின் பொய்யான மாயவலையில் அகப்பட்டு வெப்பு*

*நோயால் வருந்திப் பின் சமண நெறியைக் கைவிட்டு, திருஞானசம்பந்தரின் திருவடிகளை உண்மை அன்போடு அடைந்தார். இறைவனை வழிபட்டார்.*

*மங்கையர்கரசியரின் கணவனான நெடுமாறனார் பாண்டிய நாட்டில் சைவ சமயம் தழைக்க செங்கோல் செலுத்தி வந்த காலத்தில் தம்மிடம் போரிட்ட பகைவர்களை திருநெல்வாயில் வென்று குற்றமற்ற சிவலோக பதவியினைப் பெறுமாறு இறைவனால் ஆட்கொள்ளப்பட்டதாக,*

*"அமர்வேண்டி வந்துஏற்ற தெவ்வரை*
*நெல்வேலி தன்னில் வென்றோர்*
*வடுமாறு சிவலோக பதவியது பெற்றிடமுன்.." (திருத்தொண்டர் சதகம் பா.61)*

*என அறியமுடிகிறது.*

*மங்கையர்க்கரசியார்*

*சோழனின் மகளாய் பிறந்து பாண்டிய மன்னன் நெடுமாறனை மணந்த மங்கையர்க்கரசியார் அடியார்களுக்குப் பணி செய்வதைக் கடமையாக கொண்டு திகழ்ந்தவர். சீகாழியில் பிறந்த திருஞானசம்ந்தரின் தமிழ்ப் பாசுரத் தொகுதியில் சிறப்பாகப் பாடபெறும் வாய்ப்பினைப் பெற்று இறைவனை வழிபட்டவர். தீயவை பேசிய சமணர்கள் செய்த வாதங்களால் அவர்கள் அழிய இறைவன் வாய்ப்பு அளித்தார்.*

*"தீதுரைத் திடுசமணர் வாதுதீர்த் துத்திருத்... " ( திருத்தொண்டர் சதகம் பா.77)*

*என்ற அடியின் வாயிலாக தெளிகிறது. பாண்டிய நாடு சைவநெறி பின்பற்றுவதால் பிற சமயங்கள் கெட, திருநீறும் கண்டிகையும் சிறப்புற குலச்சிறையார் அரசியின் மனப்பண்புகளுக்கு ஏற்பச் செயற்பட்டமையால், பாண்டிய மன்னனிடம் இருந்த தீவினைகள் நீங்க, அடியார்களுக்குப் பணிவிடை செய்து சிறப்புற வாழ்ந்து இறைவனை வழிபட்டு இறுதியில் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டதாக,*

*"பண்புபணி யின்பமுற் றன்புபெறு தம்கொழுநர்*
*பாசவினை யுந்து றப்ப*
*வரமிகுந் தடியர்பணி விடை மிகுந் திடவுமுன்.." (திருத்தொண்டர் சதகம் பா.77)*

*என்ற வரிகளின் வாயிலாக வழிபாடு செய்த திறத்தையும், வீடுபேறு அடைந்ததையும் அறியமுடிகிறது.*

*குலச்சிறை நாயனார்*

*பாண்டிய நாட்டின் மணமேற்குடியில் தோன்றியவர் குலச்சிறையார். சமண சமய சார்புடைய பாண்டிய மன்னனின் தலைமை அமைச்சராய் இருந்தவர், சிவனடியார்களின் திருவடிகளை வணங்குபவர், மங்கையர்கரசியார் குறிப்பிட்டபடி செயல்படுபவர், திருஞானசம்பந்தரின் அனல்வாதம், புனல்வாதம் என்ற இரண்டு வாதங்களில் தோற்ற சமணரை கழுவேற்றம் செய்தவர். மதுரைச் சொக்கலிங்கப் பெருமானை வழிபட்டு வீடுபேறு அடைந்தார்.*

*"செய்யசம் பந்தர்வாதில் தோற்ற குண்டரைத்*
*திகழ்கழுவில் ஏற்ற புகழோர்*
*வாட்டம்இல் ஆலவாய் போற்றிஅருள் வீடுஉறமுன்... " (திருத்தொண்டர் சதகம் பா.33)*

*என்ற சான்று வரிகளால் அறிந்துகொள்ளமுடிகின்றன.*

*கணநாத நாயனார்*

*சீகாழியில் வைதிக மரபில் தோன்றியவர். நான்கு வேதங்களும் வகுத்த நெறியிலே வேதத்தை ஓதி இறைவனை வழிபட்டவர். சீகாழியில் உள்ள யாழுடைய ஈசர் திருக்கோவிலில் பணிவிடைகளைச் செய்து சிவனடியார்களுக்குத் தேவையானவற்றை வழங்கியுள்ளார். திருஞானசம்பந்தரின் திருவடிகளை வணங்கி, அர்ச்சித்து இடையறாத பக்தி பூண்ட நெஞ்சினை உடையவர். கணங்களுக்குத் தலைவராய் வாழ்ந்து தன் திருவடிகளை அடையுமாறு சிவபெருமான் அருள் புரிந்து ஆட்கொள்ளப்பட்டார்.*

*நீலகண்டப்பாண நாயனார்*

*எருக்கத்தப்புலியூரில் வாழ்ந்த நீலகண்டயாழ்ப்பாணர் பல திருத்தலங்களுக்குச் சென்று இறைவனை வழிபட்டார். பிறகு மதுரையை அடைந்து, இறைவனால் ஏவப்பட்டு யாழில்*

பண்பாடினார். அடியார்களால் திருஆலவாய்க் கோயில் முன் நின்று வாசிக்க இறைவன் அசரீரியாக பொற்பலகை தருமாறு கூறி அருள்புரிய, அப்பலகையிலிருந்து யாழை மகிழ்வோடு வாசித்து, வடதிசை வணங்க வந்த திருஞானசம்பந்தரின் திருக்கல்யாணத்தைக் காணும் பேறு பெற்று சிவனின் திருவடிகளைப் போற்றி இறைவனால் ஆட்கொள்ளப்பட்டதாக,

"மேவுசம் பந்தர்சொற் பாடலியாழ் இட்டெழில்
விளங்குபெரு மணம் உகந்து
மாயனிறை தேடுபொற் சேவடி பராவ முன்.." (திருத்தொண்டர் சதகம் பா.80)

இவ்வரிகளால் அறியமுடிகின்றன.

முடிவுரை

திருத்தொண்டர் சதகத்தில் இறைவனையும் குருவாக அமைத்து, சில அடியார்களும் குருவாக அமைந்துள்ளனர். அடியார்கள் தன்னுடைய தீவிர பக்திநெறியின் வாயிலாக இறைவனை வழிபாடு செய்து வீடுபேறடைந்துள்ளனர். இறைவன் மீது கொண்ட பக்தியினால் இறைவன், தன் அடியார்களைச் சோதிக்க மாறுவேடம் புனைந்து அருள்புரிந்துள்ளார். இவ்விடம் இறைவனைத் தவிர்த்து, ஒருவர் மீது பற்று வைத்த பின்பு, அவர் நம்மிடம் எதைக் கேட்பினும், சோதிப்பினும், உண்மை பற்றோடு இருந்தால் வீடுபேறு அடையமுடியும் என்ற உள்ளுறையாக வெளிப்படுவதை அறிந்து கொள்ளமுடிகிறது.

துணை நின்ற நூல்கள்

1. இராசேசுவரி த.முனைவர் – "சதகத்திரட்டு தொகுதி – 1" உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600113, முதற்பதிப்பு – 2001
2. சுப்பிரமணியன் ச.வே. – "சிற்றிலக்கியக் களஞ்சியம் தொகுதி – 1, சதக இலக்கியங்கள்" மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் – 608001, முதற்பதிப்பு – 21 சூன் 2015
3. நடராசன் பி.ரா – "திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம் மூலமும் உரையும் – தொகுதி 1,2,3," உமா பதிப்பகம், சென்னை - 600001
4. வச்சிரவேல்.க – "உமாபதி சிவாசாரியர் அருளிய திருவருட்பயன் மூலமும் உரையும்" இந்து மாணவர் சங்கம், இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை.
5. ஜகந்நாதன் கி.வா. – "பெரிய புராணம் விளக்கம் பகுதி – 1" அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை – 4, முதற்பதிப்பு – 1987

********* ********* ********** ********* ********* ********** ********** **********